DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.119/2025**
Prosecution Witness P.W.18

Name : **திருமதி.நாகலட்சுமி** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 10.02.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் அல்லி நகரத்தில் குடியிருந்து வருகிறேன். எனது வீடானது பஜார் தெருவில் அமைந்துள்ளது. மூன்று தெருக்கள் சந்திக்கும் பகுதியில் எனது வீடு அமைந்துள்ளது. ஒரு பக்கம் வீரப்ப அய்யனார் கோயிலுக்கு செல்லும் சாலை, பஜார் தெரு மற்றும் பகவதி அம்மன் கோயிலுக்கு செல்லும் சாலை ஆகிய மூன்று சாலைகள் சந்திக்கும் இடத்தில் எனது வீடு அமைந்துள்ளது.எனது வீட்டு வாசலில் இரண்டு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது ஒரு கேமரா கிழக்கு பார்த்து அமைந்துள்ளது மற்றொரு கேமரா மேற்கு பார்த்து அமைந்துள்ளது. கிழக்கு பார்த்த பெட்டிக் கடையை பார்த்தவாறு அமைந்திருக்கும். எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் அமைந்துள்ள பெட்டிக்கடை. அந்தப் பெட்டிக்கடையை பார்த்தவாறு அந்த கேமரா அமைந்துள்ளது.

2. மற்றொரு கேமரா மூன்று தெருக்கள் சந்திக்கும் இடத்தை பார்த்தவாறு அமைந்திருக்கும், நான் வாழ்க வளமுடன் பேராசிரியர். எங்கள் வீட்டிற்கு யாரேனும் வந்து சென்றால் அந்த விபரங்களை பார்ப்பதற்காக நான் கேமரா வைத்துள்ளேன். 05.12.2024 ஆம் தேதியன்று பி.சி பட்டி காவல் நிலையத்தில் இருந்து மூன்று போலீசார் வந்தார்கள், அதில் ஆய்வாளர் ஒருவர் உடன் வந்தார்.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு நடந்த ஒரு நிகழ்வு குறித்து எங்கள் கேமராவில் பதிவு செய்திருந்தால் அதை எடுக்க வேண்டுமென கேட்டார்கள்.

3. நான் எனது கேமரா பதிவுகளை பார்ப்பதற்கு அவர்களிடம் அனுமதி வழங்கினேன். அவர்கள் அந்த கேமரா பதிவுகளை எடுத்துச் சென்றார்கள். என்னிடம் எடுத்துச் சென்ற சி.சி.டி.வி பதிவை போலீசார் போனிலிருந்து காட்டினார்கள் நான் விளக்கமாக பார்க்கவில்லை.

**<u>எதிரிகள் 1, 2, 6, 7 தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தற்போது சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் வந்தது உண்மை அவர்கள் என் வீட்டில் இருந்து சிசிடிவி பதிவுகளை எடுத்துச் சென்றார்கள் அது பற்றிய விவரங்களை நான் தற்பொழுது சாட்சியம் அளிக்கிறேன். போலீசார் எல்லா விபரங்களையும் சொல்லாமல் தான் சி.சி.டி.வி பதிவுகளை எடுத்துச் சென்றார்களா என்றால் அந்த சமயத்தில் அவ்வாறு தான் எடுத்துச் சென்றார்கள் அதன் பிறகு எடுத்துச் சென்ற காரணத்தை என்னிடம் தெரிவித்தார்கள். போலீசார் அந்த சிசிடிவி பதிவுகளை எடுத்துக் கொண்டிருக்கும் பொழுது நான் அவர்களிடம் அது பற்றிய விவரங்களை கேட்டு தெரிந்து கொண்டேன். அந்த சமயத்தில் எனது கணவர் உடல்நிலை குறைவு காணமாக படுத்த படுக்கையாக இருந்ததால் நான் போலீசாரிடம் விளக்கமாக அந்த சிசிடிவி பதிவுகள் குறித்து கேட்கவில்லை. நான் தற்போது வழக்குக்காக போலீசார் சொல்லிக் கொடுத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சி.சி.டி.வி பதிவுகளை எடுத்துச் செல்லவில்லை என்றால் சரியல்ல.

**<u>3–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் வழக்கு சம்பந்தமான எண்கள் எதுவும் போலீசார் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கும் போது நான் யாருடைய பெயரும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**4-ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது வீட்டிற்கு பக்கத்தில் அந்தப் பகுதியில் பெயர் கேமராக்கள் ஏதும் கிடையாதென்றால் சரியல்ல, எதிரில் அமைந்துள்ள ஒரு வீட்டில் கேமரா உள்ளது. நான் இதுவரை காவல் நிலையத்திற்கு சென்றது இல்லை. இன்று நீதிமன்றத்திற்கு சாட்சியளிப்பதற்கு கூட போலீசார் அழைத்தபோது முதலில் வர முடியாது என்று தான் சொன்னேன். எனக்கு சி.சி.டி.வி கேமரா எந்த விபரமும் தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதன் பெயரில் நான் அவர்கள் எடுத்துக் கொள்ள அனுமதித்தேன். போலிசாருக்கு உதவி செய்வதற்காக அவர்கள் கேட்டதன் பேரில் நான் சி.சி.டி.வி கேமரா எடுப்பதற்கு உதவி செய்தேன்.

**மறுவிசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.10 15:16:10 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.